ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்

திகதி 2018 ஒகத்து 15

**இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்(கொ.மு.சு) – 2018 யூலை**

## தயாரிப்பு வளர்ச்சியானது மூன்றாம் காலாண்டின் ஆரம்பத்தில் சிறிதளவால் மெதுவடைந்தது

**தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** முன்னைய மாதத்தில் அவதானிக்கப்பட்ட 57.6 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2018 யூலையில் 57.2 சுட்டெண் புள்ளிகளுக்கு குறைவடைந்தது. தயாரிப்பு நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சிறிதளவான மெதுவடைதலானது, விசேடமாக உணவு மற்றும் குடிபானம் மற்றும் புடவை மற்றும் அணியும் ஆடைகள் துறையில் காணப்பட்ட அதிகளவிலான தொழிலாளர்களின் புரள்வு காரணமாக திறனற்ற தொழிலாளர்களின் பிரதியிடுதலில் காணப்பட்ட இடர்பாடுகளின் காரணமாக தொழில்நிலையின் மெதுவடைதலினால் உந்தப்பட்டது. மேலும், 2018 யூலையில் புதிய கட்டளைகள் சிறிதளவில் மெதுவடைந்திருந்தது. எவ்வாறாயினும், உற்பத்தி மற்றும் கொள்வனவுகளின் இருப்பு விசேடமாக இரசாயன மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் உற்பத்தியில் அடுத்த மூன்று மாத அளவில் எதிர்பார்க்கப்படுகின்ற சாதகமான தோற்றப்பாடு காரணமாக மேம்பாடொன்றினை காண்பித்தது. இவ் வேளையில், நீட்சியடைந்த நிரம்பலர் வழங்கல் நேரமானது வழக்கமாக பொருளாதாரத்தின் குறுகிய காலத்தில் நடவடிக்கைகளின் விரிவாக்கத்தின் துரித வளர்ச்சியை குறித்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், இந்த சூழ்நிலையில் நிரம்பலர் வழங்கல் நேரமானது உலக சந்தையில் மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் சாதகமற்ற காலநிலை நிலைமைகள் காரணமாக நீட்சியடைந்திருந்தது. ஆகையால், இது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரிவாக்கத்தினை குறித்துக்காட்டவில்லை. ஒட்டுமொத்தமாக, கொ.மு.சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான 50.0 அடிமட்டத்திற்கு மேலான பெறுமானங்களை யூலை 2018இல் பதிவு செய்ததுடன், ஒரு மெதுவான வீதத்தில் விரிவடைந்தமையினையும் காட்டியது. இதற்குமேலாக, நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு அடுத்த மூன்று மாதங்களுக்கான மேம்பாடு ஒன்றினை குறித்துக்காட்டியது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | 66.5 | 41.8 | 57.9 | 56.1 | 54.3 | 54.4 | 59.0 | 54.8 | 58.8 | 59.1 |
| | 2018 | 51.7 | 55.6 | 65.6 | 45.5 | 60.6 | 57.6 | **57.2** | - | - | - | - | - |

| மாறி | யூன் | யூலை | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.6** | **57.2** | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 60.5 | 59.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 57.0 | 57.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 58.5 | 55.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 53.5 | 57.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 54.5 | 55.0 | + | நீட்சி, உயர்வான வீதத்தில் |



## பணிகள் வளர்ச்சியானது மூன்றாம் காலாண்டின் ஆரம்பத்தில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது

**பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2018 யூனில் பதிவு செய்யப்பட்ட 58.7 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2018 யூலையில் 57.8 சுட்டெண் புள்ளிகளுக்கு குறைவடைந்திருந்தது. இது பணிகள் துறையானது 2018 யூலையில் ஒரு மெதுவடைந்த வீதத்தில் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தமையினை குறித்துக்காட்டுவதுடன், புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகள் போன்றவற்றின் உயர்வான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டது. புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளிலான வளர்ச்சியானது நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதி துறைகளில் பிரதானமாக அவதானிக்கப்பட்டது. இலத்திரனியல் வங்கி அலகுகளின் உருவாக்கம் மற்றும் பணிகள் விநியோக மூலங்களின் முன்னேற்றங்கள் போன்றன இந்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் காரணிகளாக பதிலுறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். தொழில்நிலை மட்டமானது முன்னைய இரு மாதங்களில் காணப்பட்ட அதிகரித்த வேகத்திலான தொழில் உருவாக்கத்துடன் ஒப்பிடுகையில் ஒரு மெதுவடைந்த வீதத்தில் விரிவடைந்திருந்தது. குறைவடைகின்ற நிலுவையிலுள்ள பணிகள் வழக்கமாக பொருளாதாரத்தின் குறுகிய காலப்பகுதியில் ஒரு சரிவடைதலை குறித்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், இந்த சூழ்நிலையில், நிலுவையிலுள்ள பணிகள் தொழில்நிலையின் அபிவிருத்தியினால் பகுதியளவில் குறைவடைந்திருந்தது. ஆகையால், இது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு சரிவடைதலை குறித்துக்காட்டவில்லை. இதேவேளை, பணிகள் வழங்குனர்களின் மூன்று மாதங்களுக்கான வியாபார தோற்றப்பாடு மீதான நம்பிக்கையும் 17 மாத காலப்பகுதிக்கான உயர்ந்த மட்டத்தில் உறுதியடைந்திருந்ததுடன் இது பிரதானமாக நிதியியல் பணிகள், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம், ஏனைய தனியாள் பணிகள் மற்றும் போக்குவரத்து துறைகளில் நடவடிக்கைகளின் மீது காணப்பட்டது. பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகளானது மாதகாலப்பகுதியில் எதுவித முன்கூட்டியே அறியப்படாத விலை ஏற்றங்கள் இல்லாமை காரணமாக 2018 யூலையில் ஒரு மெதுவடைந்த வீதத்தில் அதிகரித்து மூன்று மாதங்களுக்கான ஒரு குறைவான மட்டத்தினைப் பதிவு செய்தது. பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவும் யூலையில் ஒரு குறைவான வீதத்தில் அதிகரித்திருந்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | 60.8 | 54.2 | 55.3 | 59.2 | 59.1 | 60.1 | 57.0 | 55.3 | 57.4 | 61.2 |
| | 2018 | 56.6 | 58.4 | 58.0 | 53.2 | 56.9 | 58.7 | 57.8 | - | - | - | - | - |

| மாறி | யூன் | யூலை | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **58.7** | **57.8** | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய வியாபாரங்கள் | 58.8 | 59.9 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 62.0 | 63.7 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 58.8 | 51.1 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 46.1 | 42.9 | - | வீழ்ச்சி, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 67.7 | 71.3 | + | சாதகம், உயர்வான அளவிற்கு |



**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு $=50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு $>50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு $<50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.